# தென்மேற்குப் பருவ மழை: அதிகாரிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தல்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

அடுத்து, மழைக்காலங்களில், நெல் மூட்டைகள் மற்றும் உணவு தானியங்கள் மழையால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், சேமிப்பு கிடங்குகள் மற்றும் கூடங்களில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், நீர்நிலைகளில் ஆகாயத் தாமரைகளை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும், கொசுத் தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**வடிகால் பணிகளை விரைந்து முடித்திடுவீர்!**

அடுத்து, பெருநகர சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரைக்கும், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய மழைநீர் வடிகால், நீர் வழிகால்வாய்கள் மற்றும் குளங்கள் மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். பருவமழை காலத்துக்குத் தேவையான எல்லா ஆயத்த நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.

அடுத்து, நீர்வள ஆதாரத் துறையைப் பொறுத்தவரைக்கும் 17.05.2025 தேதி நிலவரப்படி, மேட்டூர் அணையில் 108.33 அடி உயரத்தில், 76.06 டி.எம்.சி தண்ணீர் இருக்கிறது. எனவே, வரும் ஜீன் 12ம் நாள் குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறப்பதற்குப் போதுமான நீர் இருக்கிறது. காவிரியின் கிளையாறுகள், வாய்க்கால்கள் ஆகியவற்றைத் தூர்வாரி, கடைமடைக்கும் தண்ணீர் கொண்டு சென்று, குறுவை சாகுபடியை செம்மையாகச் செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, வேளாண்மை-உழவர் நலத்துறையைப் பொறுத்தவரையில், தென்மேற்குப் பருவமழையை எதிர்பார்த்து கார், குறுவை, சொர்ண வாரி பருவங்களில் பயிர் சாகுபடி மேற்கொள்ள பல்வேறு முன்னேற்பாடு நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

தென்மேற்கு பருவமழை மற்றும் மேட்டூர் அணையின் நீர் திறப்பு ஆகியவற்றால் குறுவை சாகுபடி அதிகளவில் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுவதால், வேளாண் பெருமக்களுக்கு தேவையான விதைகள், உரங்கள் உள்ளிட்ட எல்லா இடு பொருட்களும் உரிய காலத்தில் கிடைப்பதையும், குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டத்தினுடைய பயன்கள் முழுமையாக விவசாயிகளைச் சென்றடைவதையும் உறுதி செய்திட, வேளாண் களஅலுவலர்கள் முழு முனைப்போடு பணியாற்ற வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும்**

அதுமட்டுமல்ல, மேட்டூர் அணையிலிருந்து நீர் திறக்கப்படுவதற்கு முன்பாகவே, கடைமடைப் பகுதிக்கும் தண்ணீர் சென்று கிடைப்பதற்கு ஏதுவாக கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும்.

எதிர்வரும் தென்மேற்கு பருவமழை காலத்தில் உயிரிழப்பு, பொருள் மற்றும் உட்கட்டமைப்பு சேதம் எதுவும் இல்லாமல், நல்ல முறையில் பருவமழை காலத்தைக் கடந்து செல்ல அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அனைத்து அரசு ஊழியர்களும் முழு முனைப்போடு பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றியதற்கு பிறகு, தென்மேற்கு பருவமழை ஆயத்த நிலை மற்றும் மேட்டூர் அணையிலிருந்து நீர் திறப்பு குறித்து விளக்கப் படத்தின் மூலம், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய்த் துறை அவர்கள், விளக்கினார்.

பின்னர், நகராட்சி நிருவாகத் துறை, வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நீர்வள ஆதாரத் துறைகளைச் சார்ந்த செயலாளர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் ஆகியோர், தங்களது துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் எடுத்துரைத்தனர்.

முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் துறை அதிகாரிகளுக்கு தங்களது ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினர்.

கூட்டத்தின் இறுதியில், வருவாய்த் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

இக்கூட்டத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (19.05.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விதி 110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், சட்டமன்ற மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் நிலை மற்றும் இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன தலைவர்/அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர்.எஸ்.விஜயகுமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், உயர் அதிகாரிகள் ஜெ.குமரகுருபரன், கே.விவேகானந்தன், ஹனிஷ் சாப்ரா, டாக்டர்.டி.ஜி.வினய், கிரண் குராலா, எஸ்.சிவராசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை குறிச்சி ‘சிட்கோ’ தொழிற்பேட்டையில்

# தங்க நகைப் பூங்கா அமைப்பது குறித்து ஆலோசனை!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

*கோவை, மே 20 -*

*கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா வர்த்தக கூட்டரங்கில் நேற்று (19.05.2025) குறு சிறு மற்றும் நாடுத்தரத் தொழி நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தங்க நகை பூங்கா அமைப்பது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை கூடுதல் தலைமை செயலாளர் மரு.அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன மேலாண் இயக்குநர் / அரசு முதன்மை செயலாளர் ஏ.கார்த்திக் , மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர் , தொழில்துறை ஆணையர் எல். நிர்மல் ராஜ், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவன பொது மேலாளர் எஸ்.தனலிங்கம் மற்றும் தங்க நகை தயாரிப்பாளர் சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

*முன்னதாக, அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலை யில் சிட்டார்க் நிறுவனம் சார்பில் 9.97 கோடி மதிப்பீட்டில் மின்வாகன மோட்டார் சோதனைக்கான பொதுவசதி மையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது.*

*பின்னர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,*

*உலக அளவில் தங்க நகை உற்பத்தியில் முக்கிய மையமாகவும், தொழில் நகரமாகவும், விளங்கும் கோயம்புத்தூருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த நவம்பர் மாதம் சிட்கோ குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.126 கோடி மதிப்பில் தங்க நகை பூங்கா அமைக்கப்படும் என அறிவித்தார்கள். MSME துறையின் மூலம் தங்க நகை பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொண்டு தற்போது முழு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 2.46 ஏக்கர் பரப்பளவில், 8 லட்சத்து 57 ஆயிரம் சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட உள்ளது.*

*இதில், தங்க நகைப் பட்டறைகள், தங்க நகை உற்பத்திக்கான பொது வசதி மையம், 3D பிரிண்டிங் மற்றும் லேசர் கட்டிங் வசதிகள், ஹால்மார் தரப் பரிசோதனைக் கூடம். பாதுக்காப்பு பெட்டகம், கண்காட்சிக் கூடம், கூட்ட அரங்கம், பயிற்சி மையம், அதிநவீன கண்காணிப்பு வசதிகள், வாகனநிறுத்துமிடம் என பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் இந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.*

*இன்றைய கூட்டத்தில் கோயம்புத்தூரில் உள்ள 18க்கும் மேற்பட்ட தங்க நகை உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள் கலந்துக் கொண்டுள்ளார்கள். தற்போது, இந்த திட்டம் குறித்து இக்கூட்டத்தில் விளக்கப்பட்டது. அரசு மிக கவனத்துடன் திட்டத்தை தயாரித்து இருந்தாலும், உங்களுக்கு தேவையான வசதிகள் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் உங்களுடைய ஆலோசனைகளை வழங்கலாம். இந்த கூட்டத்தில் தங்க நகை உற்பத்தியாளர்கள், சங்க நிர்வாகிகளின் சார்பில் வழங்கப்படும் கோரிக்கைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றி தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்தியா விலேயே மிகச்சிறந்த தங்க நகை பூங்காவாக இந்த பூங்கா அமையவுள்ளது. என கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.*

*ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்தான். அந்நிறுவனங்களை பாதுகாக்கவும், வளர்ப்பதற்காகவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.*

*கோயம்புத்தூர் மாவட்டத்தில் கள்ளப்பாளையம், மோப்பிரிப்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் கொடிசியா தனியார் தொழிற்பேட்டை ரூ.44. 32 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.22.20 கோடி திட்ட மதிப்பீட்டில் 1.49 ஏக்கர் பரப்பளவில் 618 தொழிலாளர்கள் தங்கும் வகையில் தொழிலாளர் தங்கும் விடுதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மார்ச் மாதம் திறந்து வைப்பட்டது.*

*கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.8.80 கோடி மதிப்பில் பொள்ளாச்சி கயிறு குழுமம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணி ஜீலை மாதம் முடிக்கப்படும். சொலவம் பாளையத்தில் ரூ.18.06 கோடி மதிப்பீட்டில் கொசிமா தனியார் தொழிற்பேட்டை பணிகள் நடைபெற்று வருகிறது. 2 மாதத்திற்குள் பணிகள் முடிக்கப்படும். கிட்டாம்பாளையத்தில் ரூ.24. 61 கோடி மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை இறுதி கட்டப் பணி ஜீன் மாதத்திற்குள் முடிக்கப்படும்.*

*கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.14.85 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.7.94 கோடி மானியத்துடன் மின்வாகன மோட்டார் பரிசோதனை மையம் அமைக்கும் பணி தொடங்கப்பட உள்ளது.*

*இவ்வாறு அவர் தெரிவித்தார்.*

*அதனைத் தொடர்ந்து, நீட்ஸ் திட்டத்தின் கீழ் ரூ.43.27 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.10.49 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள பொறியியல் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் கே.எஸ்.எம். இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தையும், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின் கீழ் ரூ.66 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.18.65 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள பொறியியல் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் கே.பாலோ கண்ட்ரோல் நிறுவனத்தையும், ரூ. 4.55 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.1.18கோடி மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள சுகாதார சானிட்ரி நாப்கின் உற்பத்தி செய்யும் ஷாரஸ் வென்ச்சர் நிறுவனத்தையும், ரூ.48.60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.11.45 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் ஏ.பி. டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தையும், பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் திடடத்தின் கீழ் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தொழில் வளர் மையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் தொடங்கி வைத்து நேரில் பார்வையிட்டார்.*

*முன்னதாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் முன்னிலையில் சிட்டார்க் நிறுவனம் சார்பில் 9.97 கோடி மதிப்பீட்டில் மின் வாகன மோட்டார் சோதனைக்கான பொதுவசதி மையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது.*

*2030 ஆம் ஆண்டில் 100 பில்லியன் டாலர் என்ற ஏற்றுமதி இலக்கை தமிழ்நாடு அடைய, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 செப்டம்பரில் தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் ஏற்றுமதி நிறுவனங்களுக்குத் தேவையான பொதுக் கட்டமைப்புகளை உருவாக்க 100 கோடி ரூபாய் சிறப்பு நிதி உருவாக்கப்படும். தொழிற்சாலைகள், தொழில் கூட்டமைப்பினர் பங்களிப்புடன், திறன்சார்ந்த மையங்கள், பரிசோதனை மையங்கள். ஏற்றுமதி கிடங்குகள், உள்நாட்டுக் கொள்கலன் கிடங்குகள் போன்ற கட்டமைப்புகளை அமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.*

*இதற்கிணங்க, கோயம்புத்தூரில் உள்ள சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் சமர்ப்பித்த மின் வாகன (EV) மோட்டார் சோதனைக்கான பொது வசதி மையத்தை (Common Facility Centre CFC) அமைப்பதற்கான திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இந்த மையம், 369/188,189, பொள்ளாச்சி சாலை, குறிச்சி SIDCO தொழிற்பேட்டை, கோயம்புத்தூர் 641 021 என்ற முகவரியில் அமைக்கப்பட உள்ளது. திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 9.97 கோடி ஆகும். இந்த மொத்த மதிப்பீட்டில் ரூ.8.97 கோடி ஏற்றுமதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கப்பட உள்ளது. மேலும் மீதமுள்ள ரூ.1 கோடி, சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் பங்களிக்கவுள்ளது. இந்த மையத்திற்காக கொள்முதல் செய்யப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்திற்கும் FaMeTN நிறுவனமே உரிமையாளராக இருக்கும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*தொடர்ந்து, சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் 23.09.2024 அன்று SITARC EV FOUNDATION என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு முகமை (Special Purpose Vehicle) உருவாக்கியுள்ளது. திட்டத்தை சரியான முறையில் செயல்படுத்துவதற்கும் கண்காணிக்கப்படுவதற்கும் FaMe TN நிறுவனத்திற்கும் சிட்டார்க் (SITarc) நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு நோக்கு முகமை (SPV), இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தப் புள்ளியினை விரைவில் வெளியிடவுள்ளது. அனைத்து பணிகளும் 12 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டு இச்சோதனை மையம் செயல்பாட்டிற்கு வரும்.*

*இவ்வாறு அவர் தெரிவித்தார்.*

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் 89வது நாள்!

## அம்பத்தூர் வடக்குப் பகுதியில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை, மே. 20-*

*சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 89வது நாள் அம்பத்தூர் வடக்கு பகுதி - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு உணவு வழங்கினார்.*



*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 89 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (19.5.2025) அம்பத்தூர் வடக்கு பகுதி: இடம்: 1) 79 அ - வட்டம், மாசிலாமணி ஈஸ்வரர் தெரு சந்திப்பு, ஏரிக்கரை வெங்கடேஸ் வரா நகர், 2) 81வது வட்டம் - OT பேருந்துநிலையம் அருகில், அம்பத்தூர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.*


*இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி. எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிருஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ.சேகர் எம்.சி, நா. நெப்போலியன், ஆர். டீக்கா, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*



சாம்சங் இந்தியா தொழிலாளர்கள் சங்கத்தால் எழுப்பப்பட்ட ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகள் தொடர்பாக தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தையில் நிர்வாகத்தினர் மற்றும் சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**பி.டி.ஆர். பழனிவேல்ராசன்**
**மே 20 (2006)**



**தமிழக சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறையும் - சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டமன்ற பேரவைத் தலைவராகவும் - பின்னர் தமிழக அரசின் அறநிலையத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.**

**கழகத்தின் சொத்து பாதுகாப்புக் குழு தலைவராகவும் பணியாற்றியவர்.**

**"அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது அடக்கமும், பண்பும், சான்றாண்மையும் பளிச்சிடுகின்றன" என தலைவர் கலைஞர் அவர்கள் நினைவுகூர்ந்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**